**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 134/2019**

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW2 |
| | Defence |
| | Court |

| | |
|---|---|
| Name | : |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 19th day of November 2024.

**(A1 to A5 are present. )**

**S.C. No. 134/2019**

**19.11.2024**

**அ.த.சா.2 - திரு. சுதாகர்**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது இந்திராநகர், கச்சூரில் வசித்து வருகிறேன். நான் வழக்கறிஞராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் இன்றையதினம் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்கள். கடந்த 31.05.2015 அன்று காலை 07.00 மணிக்கு நரசிம்மன் என்பவர் என்னை அழைத்தார். அப்போது என் அக்கா வீட்டில் பிரச்சனை என்று என்னை வாருங்கள் என்று அழைத்தார். என் வண்டியில் நானும் என் நண்பர் வெங்காடத்திரி என்பவரும் சம்பவயிடத்திற்கு சென்றோம். அவர் அக்கா லெட்சுமி என்பவரை குரு என்பவர் வீட்டின் உள்ளே இருந்து தலைமுடியை பிடித்து வெளியே இழுத்து வந்து சரமாரியாக அடித்து பற பசங்களுக்கு இவ்வளவு திமிரா என்று கேட்டு மானபங்கம் படுத்தினார். நரசிம்மன் மற்றும் அவர் அண்ணன் தாமோதரன், நரசிம்மனின் பெற்றோர் அனைவரையும் குருவைய்யா, ஸ்ரீனிவாசலு, மது ஆகியோர்கள் அடித்து தகாத வார்த்தைகளால் திட்டினார்கள். நரசிம்மனையும் அவர் குடும்பத்தாரையும் அசிங்கமாக திட்டினார்கள். லெட்சுமியை திருவள்ளூர் மருத்துவனைக்கு அழைத்து சென்றார்கள். அன்று இரவு சென்று நரசிம்மன் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.**

என்னை இந்த வழக்கு சம்மந்தமாக எந்த தேதியில் போலீசார் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள் என்றால் அன்றைய தினமே என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். எந்த இடத்தில் வைத்து என்னை விசாரித்து வாக்குமூலம்

பதிவு செய்தார்கள் என்றால் சம்பவயிடத்தில் வைத்து விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். அப்போது நேரம் என்ன இருக்கும் என்றால் இரவு 08.00 மணி முதல் 08.30 மணி வரை இருக்கும். அன்றைய தேதியில் அந்த இடத்தில் இரவு 08.00 மணி முதல் 08.30 மணி வரை எத்தனை பேரை விசாரணை செய்தார்கள் என்றால் நரசிம்மன் மற்றும் அவரது குடும்பத்தார், வெங்காடத்திரி, சிவய்யா ஆகியோர்களை விசாரணை செய்தார்கள். அந்த வாக்குமூலங்களை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். என்னை விசாரணை செய்த அதிகாரியின் பெயர் என்ன என்றால் டிஎஸ்பி செல்வகுமார் ஆவார். நான் வழக்கறிஞராக எத்தனை வருடங்கள் பணிபுரிந்து வருகிறேன் என்றால் 12 வருடங்களாக ஊத்துக்கோட்டை நீதிமன்றத்தில் பணிபுரிந்து வருகிறேன். சம்பவத்தன்று 07.00 மணிக்கு நரசிம்மன் போன் செய்தார் என்றால் சரிதான். பெருஞ்சேரி கிராமத்தில் இருந்து போன் செய்தார். கச்சூருக்கும் பெருஞ்சேரிக்கும் எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் 1 கி.மீ தூரம் இருக்கும். அங்கிருந்து சம்பவயிடத்திற்கு வருவதற்கு 10 அல்லது 15 நிமிடங்கள் ஆகியிருக்குமா என்றால் 5 நிமிடத்தில் சென்றுவிட்டேன். என்னை விசாரணை செய்த நேரத்தில் நரசிம்மனையும் விசாரணை செய்த போது நரசிம்மன் போலீசாரிடம் சம்பவயிடத்தில் நான் மற்றும் இரண்டு நண்பர்கள் இருந்ததாக கூறினாரா என்றால் கூறினார். நரசிம்மன் உடன் நான் காவல் நிலையம் சென்றேனா என்றால் சென்றேன். எத்தனை மணிக்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் 07.50 மணி முதல் 08.00 மணிக்குள்ளாக புகார் கொடுத்துவிட்டார். எந்த காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் பெனாலூர்பேட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். சம்பவயிடத்திற்கும் பெனாலூர்பேட்டை காவல் நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் 3 கி.மீ தூரம் இருக்கும். 31.05.2015 அன்று காலை 07.00 மணிக்கு சம்பவம் நடந்து காலதாமதமாக இரவு புகார் கொடுத்ததற்கு போலீசாரிடம் விளக்கம் கூறினேனா என்றால் விளக்கம் கூறியுள்ளேன். என்ன காரணம் கூறினோம் என்றால் அடிப்பட்டவர்களை மருத்துவமனையில் சேர்த்ததால் காலதாமதம்

என்று கூறினோம். மருத்துவமனைக்கு நான் உடன் சென்றேனா என்றால் நான் செல்லவில்லை. எதிரிகளுக்கும் லெட்சுமி என்பவருக்கும் நிலம் சம்மந்தமாக பிரச்சனை இருந்து அதுசம்மந்தமாக வழக்கு நீதிமன்றத்தில் 31.05.2015 அன்று நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். முதல் விசாரணையில் சாதியை குறித்து நான் கூறியது என்னுடைய வாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். முதல் விசாரணையில் கூறியுள்ள அந்த வார்த்தையை தவிர வேறு எந்த வார்த்தையும் என்னுடைய வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான். சம்பவத்தினால் எத்தனை நபர்களுக்கு காயம் ஏற்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் லெட்சுமிக்கு அடிப்பட்டது, மொத்தம் 3 நபர்களுக்கு காயம் ஏற்பட்டது. நான் சொன்ன தேதியில் 3 நபர்களும் மருத்துவமனை சென்று சிகிச்சை பெற்றார்களா என்றால் சிகிச்சை பெற்றார்கள். நான் சொன்ன தேதி, நேரம், இடத்தில் நான் இல்லை என்றாலும் நரசிம்மனின் நண்பர் என்பதாலும் நாங்கள் இரண்டு பேரும் ஒரே தொழிலில் இருப்பதாலும் அவர் என்னை கண்ணுற்ற சாட்சியாக சாட்சியம் அளிக்க கேட்டுக்கொண்டார் என்றாலும் அதன் அடிப்படையில் அவருக்கு பவ்யப்பட்டு நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறியது போல் எதிரிகள் சாதி பெயரை சொல்லி எதுவும் பேசவில்லை என்றாலும் அவர்களை அடிக்கவில்லை என்றாலும் சிவில் வழக்கு நிலுவையில் இருந்ததால் பின்யோசனையிட்டு பொய்யாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றாலும் அதற்கு பவ்யப்பட்டு நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 134/2019**

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW3<br>Defence<br>Court |

Name :

Father / Husband Name :

Village :

Taluk :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 19th day of November 2024.

**(A1 to A5 are present. )**

**S.C. No. 134/2019**

**19.11.2024**

**அ.த.சா.3 - திரு. வெங்காடத்திரி**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது இந்திராநகர், கச்சூரில் வசித்து வருகிறேன். எனக்கு ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் இன்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்கள். கடந்த 31.05.2015 அன்று காலை 07.00 மணிக்கு நரசிம்மன் என்பவர் எனக்கு போன் செய்து நரசிம்மன் அக்கா வீட்டில் பிரச்சனை என்று கூறி என்னை வரச்சொன்னார். நானும் என் நண்பர் சுதாகரும் அங்கு சென்றோம். அவர் அக்காவை குடிசை வீட்டில் இருந்து குருவைய்யா, ஸ்ரீனிவாசன் ஆகியோர் தரதரவென்று இழுத்து வந்து அவர் ஜாக்கெட்டை கிழித்து அவரை அசிங்கமாக பேசி தேவடியா முண்ட என்று பேசி அவர் துணி எல்லாம் விலகி பார்க்க முடியாத அளவு இருந்தார். பற தேவடியா என்று பேசினார்கள். அந்த இடத்தில் பிரச்சனையை தடுக்க போன நரசிம்மன், அவர் அண்ணன் தாமோதரன், நடராஜன் ஆகியோரையும் அடித்தார்கள். அவர் அக்காவை அடித்ததால் அவர் முகத்தில் காயம் ஏற்பட்டது. அவர் பின்னர் புகார் கொடுத்தார். எல்லாரையும் கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார்கள். அவர் குடும்பத்தார் எல்லாரும் எதிரிகள் மறுபடியும் பிரச்சனை செய்வார்கள் என்று பயந்து தான் இருந்தார்கள். மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் டிப்ளமோ படித்துள்ளேன். எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியும். 31.05.2015 அன்று நான் எங்கு வேலை செய்தேன் என்றால் ஒரு தனியார் நிறுவனத்தில் collateral manager ஆக பணிபுரிந்தேன். அந்த தனியார்

நிறுவனம் எங்குள்ளது என்றால் சென்னையில் உள்ளது. தினமும் என் ஊரில் இருந்து சென்று வருவேனா என்றால் என் ஊரைச் சுற்றி தான் எனக்கு பணி. என்னை போலீசார் எப்போது விசாரித்தார்கள் என்றால் சம்பவம் நடந்த அன்று இரவு விசாரித்தார்கள். நேரம் எனக்கு ஞாபகமில்லை, சம்பவயிடத்தில் வைத்து விசாரித்தார்கள். என்னை விசாரிக்கும்போது அதசா.2, சுதாகர், நரசிம்மன் மற்றும் அவர் குடும்பத்தார் ஆகியோரை விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். ஊர்மக்களையும் சேர்த்து விசாரித்தார்கள். நான் சொல்லிய விவரங்களை விசாரணை செய்யும்போது வாக்குமூலமாக எழுதிக்கொண்டார்கள் என்றால் சரிதான். என்னை விசாரணை செய்த அதிகாரி யார் என்றால் டிஎஸ்பி என்னை விசாரித்தார். அவருடைய பெயர் எனக்கு ஞாபகமில்லை. இன்றைய தினம் சாட்சியம் அளிக்க நரசிம்மன் உடன் சேர்ந்து தான் வந்தேன் என்றால் சரிதான். ஊர்மக்கள் சுமாராக எத்தனை பேரை விசாரணை செய்தார்கள் என்றால் சுமார் 15 நபர்களுக்கு மேல் விசாரணை செய்திருப்பார்கள். அவர்கள் பெயர் எனக்கு ஞாபகமில்லை. சம்பவத்தின்போது எதிரிகளுக்கும் நரசிம்மன் குடும்பத்தாருக்கும் இடம் சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டு சிவில் நீதிமன்றத்தில் வழக்கு நடந்துக்கொண்டிருந்தது என்றால் சரிதான். அன்று இரவு நரசிம்மனையும் விசாரித்தபோது சம்பவத்தை சுதாகர், வெங்கடாத்திரி நேரடியாக பார்த்ததாக சொன்னாரா என்றால் சொன்னார். இந்த வழக்கில் மருத்துவமனைக்கு எத்தனை பேர் சென்றார்கள் என்றால் லெட்சுமி, நரசிம்மன் மற்றும் தாமோதரன் ஆகியோர்கள் சென்றார்கள். நான் உடன் சென்றேனா என்றால் இல்லை. சம்பவயிடத்தின் அருகாமையில் சுமாராக எத்தனை வீடுகள் உள்ளது என்றால் மொத்தம் 15 வீடுகள் தான் உள்ளது. அருகாமையில் மளிகை கடையோ அல்லது வேறு கடைகள் உள்ளதாக பார்த்தேனா என்றால் நான் பார்க்கவில்லை. இந்த வழக்கில் நரசிம்மன் எப்போது புகார் கொடுத்தார் என்றால் அன்று மாலை சென்று புகார் கொடுத்தார். நான் புகார் கொடுக்க உடன் சென்றேனா என்றால் சென்றேன். புகார் கொடுக்கும்போது சம்பவத்தன்று நேரம் இரவு சுமார் 07.30 மணி இருக்கும் என்றால் சரிதான். அந்த

புகாரை யார் எழுதினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு ஞாபகமில்லை. எனக்கு நரசிம்மன் போன் செய்து அழைத்தாரா அல்லது சுதாகர் அழைத்தாரா என்றால் நரசிம்மன் தான் அழைத்தார். சுதாகரும் நானும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். மிக அருகாமையில் உள்ள வீடுகள் என்றால் பக்கத்து தெரு ஆகும். நான் சொன்ன தேதியில், நேரத்தில் நான் சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எதிரிகள் லெட்சுமியையோ அல்லது அவரது குடும்பத்தாரையோ சாதியின் பெயரை சொல்லி திட்டவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் அவர்களை அசிங்கமாகவோ அவதூறான வார்த்தைகளாலோ எதிரிகள் பேசவில்லை என்றாலும் எதிரிகள் யாரும் அவர்களை அடிக்கவில்லை என்றாலும் சரியல்ல. இவர்கள் இருவருக்கும் இருந்த சிவில் வழக்கை வாபஸ் பெறச்சொல்லி நரசிம்மன் குடும்பத்தார் தரப்பில் கேட்டார்கள் என்றாலும் எதிரிகள் தரப்பில் அதற்கு மறுத்தார்கள் என்றாலும் அதற்காக பொய்யான புகாரை காலத்தாமதமாக கொடுத்தார்கள் என்றாலும் நரசிம்மனின் நண்பர் என்பதால் அவருக்கு பவ்யப்பட்டு நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO.134/2019**

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW4<br>Defence<br>Court |

Name :

Father / Husband Name :

Village :

Taluk :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of $19^{th}$ day of November 2024.

**(A1 to A5 are present. )**

# S.C. No. 134/2019

# 19.11.2024

**அ.த.சா.4 - திரு. சிவய்யா**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது இந்திராநகர், கச்சூரில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் இன்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்கள். கடந்த 31.05.2019 அன்று காலை 07.00 மணிக்கு போன் வந்தது. என் நண்பர் நரசிம்மன் போன் செய்து பிரச்சனை என்று வரச்சொன்னார். நான் வந்த பார்த்தபோது கூட்டமாக இருந்தது. லெட்சுமியை குருவைய்யா தரதரவென்று இழுத்து வந்து தெலுங்கில் தகாத வார்த்தைகளால் திட்டினார். எவ்வளவு தைரியம் எங்களையே எதிர்க்கிறீர்கள் என்று திட்டினார். சாதியை பற்றி தரக்குறைவாக பேசினார். லெட்சுமிக்கு இடது பக்க கண்ணில் அடிப்பட்டது. ஜாக்கெட் எல்லாம் கிழிந்துவிட்டது. அப்போது எல்லாரும் இருந்தார்கள். சுதாகர் வழக்கறிஞர், வெங்காடத்திரி ஆகியோர் வந்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.**

போலீசார் என்னை விசாரித்தபோதும் தற்போது நீதிமன்றத்தில் முதல் விசாரணையில் கூறிய விவரங்களை தான் கூறினேன் என்றால் சரிதான். சம்பவத்தின்போது எதிரிகள் தரப்பிற்கும் நரசிம்மன் குடும்பத்தாருக்கும் இடம் சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டு சிவில் வழக்கு நடந்து வந்தது என்றால் சரிதான். நரசிம்மன் என் நண்பர் என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் சாட்சியம் அளிக்க வரும்போது நரசிம்மன் உடன் தான் வந்தேன் என்றால் சரிதான். நான் கூறியது போல் எதிரிகள் யாரையும் அடிக்கவில்லை என்றாலும் சாதியின் பெயரை கூறி திட்டவில்லை என்றாலும் சிவில்

வழக்கு நிலுவையில் உள்ளதால் அவர்களை பயமுறுத்த பொய்யாக கொடுக்கப்பட்ட புகாருக்கு பவ்யப்பட்டு நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.